# தோட்டக்கலைத்துறை- நீலகிரிமாவட்டம்

## இயற்கைவிவசாயத்தில்Waste De Composer ன்பங்கு

Waste decomposer என்ற நுண்ணுயிர் கலவை National Centre of Organic Farming, Gaziyabad நிறுவனத்தின் தயாரிப்பாகும். இதை போன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்திலும் தயாரித்து விநியோகம் செய்யப்படுகிறது.




**பயன்கள்**

1. மண்ணில் உள்ள சத்துக்களை சிதைத்து பயிர்கள் எளிதில் எடுத்து கொள்ளும் வகையில் மாற்றுகிறது.
2. விலங்கு மற்றும் தாவர கழிவுகளை அவற்றின் சத்துக்கள் குறையாமல் 30 நாட்களில் மட்க செய்து உரமாக மாற்றும் தன்மை கொண்டது.
3. சத்துக்களை பயிர்கள் எடுத்துக்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதால் (Nutrient uptake efficiency) பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் இரசாயன உரங்களில் 25% உரம் மட்டும் போதுமானது.
4. தோட்டத்தில் உள்ள களை செடிகளை Waste -De Composer கரைசலில் ஊரவைத்து தெளிப்பதன் மூலம் களைசெடிகளில் உள்ள Alkoloids களை கிரகித்துவைப்பதால் நோய்களை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.
5. பயிர்களுக்லு தேவையான நுண்ணூட்ட சத்துக்களை வழங்கவல்லது ஊரவைத்து தெளிப்பதன் மூலம் கற்கலால் உள்ள தாதுபொருட்களை (Minerals) கரைத்து பயிர்களுக்கு கிடைக்க செய்கிறது.

## Waste decomposer தயாரிப்பு முறை

Waste-decomposer பாட்டிலில் உள்ள கலவையை 200 லிட்டர் தண்ணீரில் நன்கு கரைக்க வேண்டும். நுண்ணுயிர்களின் பெருக்கத்திற்கு தேவையான சக்தியை கொடுக்க இரண்டு கிலோ வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை கலக்கி ஒரு வாரம் வைத்திருக்க வேண்டும்.

Plastic டிரமின் மேல் பாகத்தினை காற்று புகும் துணியினால் கட்டி நிழலான பகுதியில் வைத்து காலை மற்று மாலை இரு வேளைகளில் கலக்க வேண்டும். ஏழு நாட்களில் Waste-decomposer கரைசல் தயாராகிவிடும். தயாரான கரைசலில் 180 லிட்டரை பயன்படுத்திவிட்டு மீதமுள்ள 20 லிட்டரில் திரும்பவும் 180 லிட்டர் நீரை கலந்து 2 கிலோ வெல்லம் கலந்து ஒரு வாரம் மேற்கண்டவாறு வைத்திருந்தால் மீண்டும் 200 லிட்டர் கரைசல் தயாராகிவிடும். ஒரு முறை Waste-decomposer பாட்டில் வாங்கி விட்டால் தொடர்ந்து கரைசல் தயாரிக்கலாம். இதன் அடக்க விலை ரூ.20 இருபது மட்டுமே.......

## Waste decomposer பயன்படுத்தும் முறை

1. பாசன நீரில் கலந்து ஒரு போகத்தில் 1000 லிட்டர் (15 நாள் இடைவெளியில் 200 லிட்டர் வீதம் 5 முறை) மண்ணில் கலந்து விடுவதால் மண்ணில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் சிதைத்து பயிர்களுக்கு கிடைக்க செய்கிறது. மேலும், மண்ணின் அங்கக கரிமசத்து (Organic Carbon) 0.1 % அதிகரிப்பதால் பயிர்களின் சத்துக்கள் எடுத்துக்கொள்ளும் தன்மை (Nutrient uptaking efficiency) 10 மடங்கு அதிகரிப்பதால் பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் இரசாயன உரங்களில் 25% மட்டும் உபயோகித்தால் போதுமானது.
2. தாவர மற்றும் விலங்கு கழிவுகளை மட்க செய்ய ஏழு நாட்களுக்கு ஒருமுறை கழிவுகளில் கலந்து கலக்கி விடுவதன் மூலம் 30 நாட்களில் தரமான கம்போஸ்ட் தயாராகிவிடும். மேலும் இம்முறையில் கம்போஸ்ட் படுகையில் வெப்பநிலை சீராக இருப்பதால், நைட்ரஜன் மற்றும் இதர சத்துக்கள் எதுவும் வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்க செய்கிறது.
3. 200 லிட்டர் Waste decomposer கரைசலில் 2 கிலோ பயிறுமாவு, 2 கிலோ எண்ணெய்வித்து மாவு, 100 கிராம் ஜிங்க் சல்பேட், 100 கிராம் பெர்ரஸ்சல்பேட், 50 கிராம் காப்பர் சல்பேட், 50 கிராம் போரான் கலந்து ஒரு வாரம் வைத்து தெளிப்பதன் மூலம் தாவரங்களுக்கு தேவையான 85 வகையான சத்துக்கள் எளிதில் கிடைக்கிறது.
4. தோட்டத்தில் உள்ள பலவகையான களைச் செடிகளை துண்டு துண்டாக நறுக்கி இரண்டு மடங்கு Waste decomposer கரைசலில் ஒரு வாரம் ஊரவைத்து பின்பு 100 லிட்டர் நீரில் 10 லிட்டர் மேற்கண்ட கரைசலை கலந்து தெளிப்பதன் மூலம் தாவரங்களின் பல வகையான நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.
5. Waste decomposer 100 லிட்டர் கரைசலில் தோட்டத்தில் உள்ள பலவகையான கற்களை ஊரவைக்கும்போது கற்களில் உள்ள தாதுபொருட்கள் கரைந்து நாளடைவில் கற்கள் சிறியதாவதை நாம் கவனிக்கலாம். இக்கரைசலை பாசன நீரில் கலந்து விடும்போது பல்வகையான தாதுபொருட்கள் பயிர்களுக்கு கிடைக்கிறது.

பல்வேறு பயன்களை கொண்ட Waste decomposer கரைசலை உபயோகித்து பயனடைய அனைத்து விவசாயிகளும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Source : Natural Centre of Organic Farming , Gazhiabad

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner